**ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ்**

**வினா விடை நேரம்**

**வினா எண் 332**

**தலைப்பு**

**"தெய்வத்திடம் நெருக்கத்தை ஏற்படுத்தி கொள்வது எவ்வாறு"**

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 123-129 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி.

கேள்வி:ஸ்வாமி தெய்வத்தினிடம் தீவிர நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதும் அந்த நம்பிக்கையின் தீவிரத்தை பொறுத்தே எங்களுக்கு ஏற்படுகின்ற அனுபவங்களும் அமையும் என்பதும் எங்களுக்கு நன்கு புரிகிறது ஸ்வாமி.கடவுளின் கருணையும் எங்களின் நம்பிக்கையின் தீவிரத்தை பொறுத்தே அமையுமா ஸ்வாமி

நிச்சயமாக. நீங்கள் முயற்சி செய்வதற்கேற்ப அருள் கிடைக்கும்.
தீவிர முயற்சியினால் நீங்கள் ரிஷியாகவே ஆகி விடலாம்.
கிராமத்து பையன் ஒருவனிடம் பண்டிதர் ஒருவர் பிராணாயாமம் மற்றும் தியானம் மூலம் இறைவனை உணர முடியும் என்றார்.
அவனும் அது போன்ற பயிற்சியில் நம்பிக்கையுடன் ஈடுபட்டான்.அவனுடைய பக்தியையும் நேர்மையையும் கண்ட கடவுள் அவனுக்கு நேரில் தரிசனம் கொடுத்து ஆசீர்வதித்தார்.அவன் பண்டிதரிடம் கடவுளின் தரிசனம் தனக்கு கிட்டியது பற்றி கூறினான்.பண்டிதர் அதை நம்பாமல் நான் பல வருடங்களாக செய்து கொண்டு வருகிறேன்.எனக்கு தரிசனம் கிடைக்கவில்லை என்றார்.அந்த சிறுவன் தன்னுடைய இடத்திற்கு திரும்பிய போது அங்கே ஸ்ரீ மன் நாராயணர் இன்னும் நின்று கொண்டிருப்பதை பார்த்தான்.ஸ்வாமி பண்டிதர் என்னை நம்பவில்லை.நான் போய் அவரை அழைத்து வருகிறேன்.அது வரை நீங்கள் இங்கேயே இருங்கள் என வேண்டி கொண்டு இறைவனை ஒரு கம்பத்தில் கட்டி விட்டு பண்டிதரை அழைத்து வந்தான்.அவர் கண்ணுக்கு நாராயணர் தெரியவில்லை.அந்த மாடு மேய்க்கும் சிறுவன் பண்டிதர் கண்ணுக்கு தெரியும்படி இறைஞ்சி வேண்டி கொண்டான்.
நாராயணர் பண்டிதருக்கும் தரிசனம் கொடுத்தார்.பண்டிதர் கூறியதை மிக உறுதியாக அந்த சிறுவன் நம்பினான்.அந்த நம்பிக்கையே அவனுக்கு இறை தரிசனத்தை பெற்று தந்தது.
நீங்களும் பிரார்த்தனையில் ஈடுபட்டால் உங்களுக்கும் ஆனந்தமும் அமைதியும் கிடைக்கும்.நீங்கள் தனியாக திருப்பதிக்கு கால்நடையாக ஏறி பெருமாளை தரிசிக்கும் போது உடல் சோர்வு அடைவீர்கள்.அதுவே ஒரு குழுவாக பிற பக்தர்களுடன் சேர்ந்து பஜனை பாடல்களை பாடிக் கொண்டு சென்றால் ஆனந்தத்தை அனுபவிப்பீர்கள்

அடுத்த கேள்வி: ஸ்வாமி இந்த கலியுகத்தில் பக்தி இறை நம்பிக்கை ஸ்திரத்தன்மை இவையெல்லாம் குறைந்து கொண்டே வருகிறது
அது மட்டுமில்லை ஸ்வாமி.இறை வழிபாட்டில் ஈடுபடுபவர்களை கேலி செய்து அவர்கள் மத உணர்வை புண்படுத்துவதும் நடக்கிறது.இது மிகவும் வருத்தம் தருகின்ற நிகழ்வாகும். இத்தகைய தருணத்தில் நாங்கள் என்ன செய்ய வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:முதலில் உங்களை திருத்திக் கொள்ளுங்கள்.உங்களுடைய தவறுகளை குற்றங்களை சரி செய்து கொள்ளுங்கள்.
நீங்கள் குற்றமற்றவராக இல்லாத போது மற்றவரை குறை கூற உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை.
முதலில் உங்களுடைய இறை நம்பிக்கை உறுதியானதாக ஆழமானதாக அலைபாயாமல் இருக்கிறதா என உறுதி செய்து கொள்ளுங்கள்.
ஆந்திர தேசத்திலே ராஜு என்ற பெயர் கொண்ட மூன்று விற்பன்னர்கள் இருந்தனர்.கவிதைகள் புனைவதில் சிறந்தவராக கோப ராஜுவும் இறை பக்தியில் சிறந்தவராக தியாக ராஜுவும் இசையில் சிறந்தவராக போத ராஜுவும் விளங்கினர். போத ராஜு அதாவது போதண்ணா பொன்னும் பொருளும் அரசர் தருவதாக கூறிய போதும் தான் எழுதிய சிறந்த காவியமான பாகவதத்தை அரசருக்கு அர்ப்பணிக்காமல் ஸ்ரீ ராமரின் திருவடிகளில் சமர்பித்தார்.
கோபண்ணா தன்னுடைய செல்வம் அனைத்தையும் ஸ்ரீ ராமரின் திருக்கோயிலை புனரமைப்பதற்கு செலவழித்தார்.
தியாகராஜுவோ ஸ்ரீ ராமருடைய சந்நிதியை அணுகி இருப்பதே தலை சிறந்த செல்வம் என கூறி ராம பக்தியில் சிறந்தவராக இருந்தார்.இவர்கள் மூவரும் தங்கள் நம்பிக்கையிலே வாழ்ந்து இறையின்பத்தின் உயர்வை அனுபவித்தார்கள்.மற்றவர்களின் குறுக்கீடுகளுக்கு அனுமதிக்காமல் உலக வாழ்க்கையின் போலி சுவைகளுக்கு
ஆளாகாமல் இருந்தார்கள்.
யானை நடந்து செல்லும் போது நாய் அதை பார்த்து குறைக்கலாம்.
அதனால் யானைக்கு ஒன்றும் நஷ்டமில்லை.
சமுத்திரத்தின் பிரம்மாண்டம் நீங்கள் அறிந்ததே.அமிர்தமும் ஆலஹாலமும் சமுத்திரத்திலிருந்தே வர வில்லையா.
அது போலவே மனித சமுதாயமும் அமிர்தம் போன்ற நல்லவர்களையும் ஆலஹாலம் போன்ற தீயவர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.
தீயவர்கள் எப்போதும் நல்லவர்களை பார்த்து கேலி பேசுவார்கள்.அதற்காக உங்களுடைய நல்ல தன்மையையும் மேன்மையான குணங்களையும் விட்டு விட வேண்டும் என்று அர்த்தமில்லை.
ஒரு கொக்கு அன்ன பட்சியை பரிகசிக்கலாம்.குயிலின் இனிமை காக்கைக்கு நாரசமாக இருக்கலாம்.
குயில் பசுமையான மாந்தளிர்களையும் காக்கை கசப்பான வேப்ப இலைகளையும் உண்கின்றன.
அது போல் சிலர் உலகாயத சிற்றின்பங்களில் நாட்டம் கொண்டு அலைகிறார்கள்.வேறு சிலர் இறை வழிபாட்டில் ஈடுபட்டு தெய்வீக ஆனந்தத்தை பெற ஏங்குகிறார்கள்.பொதி

சமக்கும் கழுதைக்கு கற்பூர வாசனை தெரியுமா அல்லது எருமைக்குத்தான் அரிசியின் சுவை தெரியுமா.
தெய்வத்தின் அருமையை சாதாரணமானவர்களால் தெரிந்து கொள்ள முடியாது.கடவுள் இல்லை என்று சொன்னால் நீங்களே இல்லை என்றாகி விடும்.நீங்களும் கடவுளும் வேறு வேறு அல்ல.நீங்கள் தான் கடவுள்.
நீங்கள் புகழ்வதும் இகழ்வதும் கடவுளை ஒரு போதும் பாதிக்காது.உங்களுடைய நல்ல மற்றும் கெட்ட செயல்கள் எதிர் வினையாக உங்களுக்கே திரும்ப வரும். கோடாலி தனக்கு ஒரு தீங்கும் செய்யாத சந்தன மரத்தை வெட்டுகிறது.இந்த தீய செயலுக்காக கோடாலியின் முனை முழங்கி விடும் போது அது தீயில் இட்டு வாட்டப்படுகிறது
சந்தன மரம் கோடாலிக்கு எந்த தீங்கும் செய்யவில்லை.கோடாலி தான் செய்து விட்ட தீமைக்கான தண்டனையை எதிர் வினையாக அனுபவிக்கிறது.

தீயிலிட்டு வெட்டப்படும் போது தங்கம் பிரகாசிக்கிறது.அதை செய்யும் அந்த பொற்கொல்லருக்கோ கண்களிலும் உடையிலும் தூசி விழுந்து விடுகிறது.பொற் கொல்லரின் வினையே எதிர் வினையாகி அவரை பாதிக்கிறது.அது போல கடவுளை தூஷிப்பவர்களை கடவுள் ஒன்றும் செய்ய மாட்டார்.ஆனால் அவர்கள் தூஷணையின் எதிர் வினை அவர்களை நிச்சயம் பாதிக்கும்.அதாவது தங்களை தாங்களே தண்டித்து கொள்வார்கள்.
சூரியனை நோக்கி நீங்கள் தூசை அள்ளி வீசினால் அது உங்கள் கண்ணிலேயே விழும்.மின்விசிறியையோ மின் விளக்கையோ போட்டால் அவை குளிர்ந்த காற்றையும் வெளிச்சத்தையும் தருகின்றன.போடாவிட்டால் அவைகளுக்கு ஒன்றும் நஷ்ட்டமில்லை.
பணம் கொடுத்து உலகில் பொருள் வாங்குவது போல இறை நாம ஸ்மரணையை கொடுத்து நீங்கள் தெய்வானந்தத்தை வாங்கி விடலாம்.தெரு விளக்கிற்கு கீழே நின்று நீங்கள் அனைத்தையும் பார்க்க முடியும் அந்த விளக்கு உட்பட.அது போல் தெய்வீகம் உங்களை ஆனந்தத்தில் ஆழ்த்துவதோடு உங்களை சுற்றி உள்ளவர்களையும் ஆனந்தத்தில் ஆழ்த்திவிடும்.
எனவே உங்கள் நம்பிக்கையை அதிக படுத்தி கொள்ளுங்கள்.
ஆத்மானந்தத்தை அனுபவியுங்கள்
அதுவே நீங்கள் செய்ய வேண்டியதாகும்
பழங்கள் தங்களை தாங்களே காத்து கொள்ள முடியாது.மரம் தான் அவைகளை பாதுகாக்கிறது
மரத்தை வேர்கள் பாதுகாக்கின்றன.வேறுக்கு நீர் ஊற்றி உரம் போடுவது பாதுகாக்கிறது.
அது போல சிருஷ்டி அனைத்திற்கும் வேராக இருக்கின்ற இறைவனிடத்தில் சரணாகதி செய்து கொண்டால் அனைத்தையும் அவர் கவனித்து கொள்வார்.
உலக பற்றுகளில் ஆழ்ந்திருப்பவர்களால் தெய்வீக உணர்வுகளை புரிந்து கொள்ள முடியாது.கடலுக்கடியில் முத்து இருந்தாலும் கடல் நீர் உப்பாகத்தானே உள்ளது.பல்வேறு குணாதிசியங்கள் கொண்ட மனிதர்கள் இந்த உலகில் இருக்கிறார்கள்.கடவுள் யாருக்கும் எதிரானவர் அல்ல.எவருக்கும் நெருங்கிய வருமல்ல.

கடவுளுக்கு அனைவரும் ஒன்று தான்.உங்கள் வலது கையில் வைத்திருந்தாலும் இடது கையில் வைத்திருந்தாலும் மல்லிகையின் மணம் ஒரே மாதிரி தான் இருக்கும்.அந்த ஒருவரே கடவுள்.அவர் அனைவரைள்ளும் உறைகிறார்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி இறைவன் மீது தீவிர பக்தி செலுத்தியபடி இருக்க வேண்டும் என நீண்ட நாட்களாக பிரயத்தனப்பட்டு வந்தாலும் இது வரை கை கூட வில்லை.ஒரு தீவிர பக்தனுக்கு எந்த அளவு ஆழ்ந்த பக்தி இருக்க வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
இங்கு கால நேரத்திற்கு முக்கியமில்லை.ஒரு இரும்பு குண்டு எவ்வளவு காலம் குட்டையில் ஊறியபடி இருந்தாலும் மாறாது.நல்லதொரு மனமாற்றத்தை அடைவதே முக்கியமாகும்.
இப்படியாக ஒரு இலக்கை உங்களுக்கு நீங்களே ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.எவ்வளவு காலம் ஆனாலும் சரி.இலக்கை அடைவதுதான் முக்கியம்.
விளக்கு எரிய பாத்திரம் திரி எண்ணெய் மூன்றும் அவசியம்.
தண்ணீரில் நீண்ட நேரம் ஊறிய திரியை கொண்டு விளக்கெரிக்க முடியுமா.அந்த திரியை நீரிலிருந்து வெளியே எடுத்து சிறிது நேரம் வெய்யலில் காயவைத்து பின் விளக்கெறிக்கலாம்.
திரியை வெய்யிலில் காய வைப்பது என்பது ஆசைகளை துரப்பதாகும்.
விளக்கேற்றுவது என்பது ஆன்மீக சாதனைகளில் ஈடுபடுவதாகவும்
விளக்கின் வெளிச்சம் என்பது உங்களுக்கு உள்ளே தோன்றுகின்ற இறை பக்தி அதாவது இறைவன் மீது ஏற்படுகின்ற ஆழ்ந்த அன்பாகும்.விளக்கு ஏற்ற தேவையான பாத்திரமே உங்கள் உடல் ஆகும்.உலக பற்றுகளில் மூழ்கி இருக்கும் வரை நீங்கள் கடவுளை விட்டு தொலைவிலேயே இருக்கிறீர்கள்.அதனால் ஒரு போதும் இறை ஆனந்த்தை அனுபவிக்க முடியாது.
பற்றறுத்தல் என்ற சூரிய ஒளியில் காயவைக்க வைப்பதன் மூலம் பக்தி என்ற ஒளியை பெறுங்கள்.பல பேர் இங்கே நீண்ட நாட்கள் தங்கியிருந்தாலும் வேண்டுமளவிற்கு அவர்களின் பக்தி வளரவில்லை.
எனவே தான் எல்லாராலும் ஆழ்ந்த பக்தியை வளர்த்து கொள்ள முடிவதில்லை.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்
ஜெய் சாயிராம்.